Australian Government
Department of Home Affairs

**தொற்றுநோய்க் காலத்தின்போது விசாக்களுக்கான ஏற்பாடுகளை அரசாங்கம் தொடர்ந்து பரிசீலனை செய்து வருகிறது. விசா ஏற்பாடுகள் குறித்து மாற்றங்கள் செய்யப்படும்போதெல்லாம் இந்தப் பக்கம் தொடர்ந்து புதுப்பிக்கப்படும்.**


விசா சலுகைகள்
குடும்ப விசாவிற்கு விண்ணப்பிப்பவர்களுக்கான சலுகைகள்
பெற்றோர் விசாக்கள்
ஸ்பான்சர் செய்யப்பட்ட பெற்றோர் (தற்காலிகமானது) (துணைப்பிரிவு 870) விசாக்கள்


---

## விசா சலுகைகள்

கோவிட்-19 தொற்று பயணக் கட்டுப்பாடுகளினால் நீங்கள் பாதிக்கப்பட்டிருந்தால், நீங்கள் இச்சலுகையைப் பெறத் தகுதியுடையவராக இருக்கலாம்.

கோவிட்-19 சலுகைக் காலமானது 1 பிப்ரவரி 2020 முதல் தொடங்கப்பட்டது:

- பிராந்தியரீதியாக தேர்ச்சி பெற்றவர்களுக்கான (துணைப்பிரிவு 887) விசா
- வணிகக் கண்டுபிடிப்பு மற்றும் முதலீட்டு (தற்காலிகமானது)(துணைப்பிரிவு 888) விசா
- வணிகக் கண்டுபிடிப்பு மற்றும் முதலீட்டு (தற்காலிகமானது)(துணைப்பிரிவு 188) விசா
- சேஃப் ஹேவன் எண்டர்பிரைஸ் (துணைப்பிரிவு 790) விசா
- தற்காலிகப் பட்டதாரி (துணைப்பிரிவு 485) விசா.

## குடும்ப விசாவிற்கு விண்ணப்பிப்பவர்களுக்கான சலுகைகள்

### துணையாளர் மற்றும் குழந்தைக்கான விசாக்கள்

நீங்கள் பின்வரும் விசாவிற்கு அவுஸ்திரேலியாவிற்கு வெளியே இருந்து விண்ணப்பித்திருந்து:

- குழந்தைக்கான (துணைப்பிரிவு 101) விசா
- தத்தெடுத்த நபருக்கான (துணைப்பிரிவு 102) விசா
- திருமணம் செய்துக்கொள்ளவிருக்கும் நபருக்கான (துணைப்பிரிவு 300) விசா

- துணையாளருக்கான (துணைப்பிரிவு 309) விசா

மற்றும்

- கோவிட்-19 சலுகைக் காலத்தில் நீங்கள் அவுஸ்திரேலியாவில் இருக்கிறீர்கள் என்றால்

நீங்கள் மற்ற அனைத்து விசா நிபந்தனைகளையும் பூர்த்தி செய்தால் அவுஸ்திரேலியாவில் விசா வழங்கப்படலாம்.

கோவிட்-19 சலுகைக் காலம் பிப்ரவரி 1, 2020 அன்று தொடங்கியது, இது ஒரு தற்காலிக ஏற்பாடேயாகும். சலுகைக் காலம் எப்போது முடிவடையும் என்பது பற்றிய அறிவிப்புகளுக்கு இங்கே மீண்டும் வந்து பார்வையிடவும்.

5 மார்ச் 2022 முதல், விண்ணப்பதாரர் தன்னைச் சார்ந்திருக்கும் குழந்தைக்கான விசா விண்ணப்பத்தை அவுஸ்திரேலியாவுக்குள்ளே இருந்து அல்லது வெளியில் இருந்து என எங்கு விண்ணப்பித்திருந்தாலும், அந்தச் சார்ந்திருக்கும் குழந்தைக்கான (துணைப்பிரிவு 445) விசா வழங்கப்படும். இதன் விளைவாக, இந்த விசாத் துணைப்பிரிவு இனி கோவிட்-19 சலுகை ஏற்பாடுகளுக்கு உட்பட்டது அல்ல. மேலதிகத் தகவலுக்கு விண்ணப்பதாரரைச் சார்ந்திருக்கும் குழந்தைக்கான விசா (துணைப்பிரிவு 445) என்பதைப் பார்வையிடவும்.

## பெற்றோர் விசாக்கள்

### அவுஸ்திரேலியாவுக்கு வெளியே விண்ணப்பிக்கப்பட்ட பெற்றோர் விசா

நீங்கள் பின்வரும் விசாவிற்கு அவுஸ்திரேலியாவிற்கு வெளியே விண்ணப்பித்திருந்து,

- பெற்றோர் (துணைப்பிரிவு 103) விசா
- பங்களிப்பு பெற்றோர் (துணைப்பிரிவு 173) விசா
- பங்களிப்பு பெற்றோர் (துணைப்பிரிவு 143) விசா

மற்றும்

- நீங்கள் 24 மார்ச் 2021க்கு முன் விசாவிற்கு விண்ணப்பித்திருந்து, மற்றும்
- நீங்கள் 24 மார்ச் 2021 அன்று அவுஸ்திரேலியாவில் இருந்தீர்கள் என்றால்,

கோவிட்-19 சலுகைக் காலத்தில் மற்ற அனைத்து விசா நிபந்தனைகளையும் நீங்கள் பூர்த்தி செய்தால், நீங்கள் அவுஸ்திரேலியாவில் இருக்கும்போதே உங்களுக்கு விசா வழங்கப்படலாம்.
நீங்கள் அவுஸ்திரேலியாவிற்கு வெளியே இருக்கும்போது இந்த விசாவிற்கு விண்ணப்பித்து, வழக்கமான விசா மானிய விதிமுறைகளைப் பூர்த்தி செய்தால் (தற்போதைய செயல்முறையின்படி) அவுஸ்திரேலியாவிற்கு வெளியே இருக்கும்போதே உங்களுக்கு விசா வழங்க முடியும்.

## அவுஸ்திரேலியாவில் விண்ணப்பிக்கப்பட்ட பெற்றோர் விசா

நீங்கள் பின்வரும் விசாவிற்கு அவுஸ்திரேலியாவில் விண்ணப்பித்திருந்து

- வயதான பெற்றோருக்கான (துணைப்பிரிவு 804) விசா
- வயதான பெற்றோருக்கான (துணைப்பிரிவு 864) பங்களிப்பு விசா

மற்றும்

- நீங்கள் 24 மார்ச் 2021க்கு முன் விசாவிற்கு விண்ணப்பித்திருந்து, மற்றும்
- நீங்கள் 24 மார்ச் 2021 அன்று அவுஸ்திரேலியாவுக்கு வெளியே இருந்தீர்கள் என்றால்,

கோவிட்-19 சலுகைக் காலத்தில் மற்ற அனைத்து விசா நிபந்தனைகளையும் நீங்கள் பூர்த்தி செய்திருந்தால், அவுஸ்திரேலியாவுக்கு வெளியே இருக்கும்போதும் உங்களுக்கு விசா வழங்கப்படலாம்.

நீங்கள் அவுஸ்திரேலியாவில் இந்த விசாவிற்கு விண்ணப்பித்து, வழக்கமான விசா மானியத் தேவைகளைப் பூர்த்தி செய்தால், (தற்போதைய செயல்முறையின்படி) அவுஸ்திரேலியாவிலேயே உங்களுக்கு விசா வழங்க முடியும்.

பெற்றோர் விசா விண்ணப்பதாரர்களுக்கான தற்காலிக சலுகைகள் கோவிட்-19 சலுகைக் காலத்தில் பொருந்தும். கோவிட்-19 சலுகைக் காலம் பிப்ரவரி 1, 2020 அன்று தொடங்கியது. இது ஒரு தற்காலிக ஏற்பாடேயாகும். சலுகைக் காலம் எப்போது முடிவடையும் என்பது பற்றிய அறிவிப்புகளுக்கு இங்கே மீண்டும் வந்து பார்வையிடவும்.

இந்தத் திருத்தங்கள், பெற்றோர் விசா விண்ணப்பங்களுக்கான தற்போதைய செயலாக்க காலவரையறைகளைப் பாதிக்காது. மேலதிகத் தகவலுக்கு, பெற்றோர் விசா வரிசை வெளியீட்டுத் திகதிகள் மற்றும் செயலாக்க நேரங்கள் என்பதைப் பார்வையிடவும்.

## பெற்றோர் விசா மற்றும் பங்களிப்பு பெற்றோர் விசா விண்ணப்பதாரர்களுக்கான இணைப்பு விசாக்கள்

கோவிட்-19 சலுகைகள் நடைமுறையில் இருக்கும் காலகட்டத்தில், பின்வரும் நிபந்தனைகள் அனைத்தும் பூர்த்தி செய்யப்பட்டால், உங்கள் பெற்றோர் (துணைப்பிரிவு 103) விசா, பெற்றோருக்கான (துணை வகுப்பு 143) பங்களிப்பு விசா அல்லது பெற்றோருக்கான (தற்காலிகமானது) (துணைப்பிரிவு 173) பங்களிப்பு விசா விண்ணப்பம் தொடர்பாக இணைப்பு விசா வழங்குவதற்கு நீங்கள் தகுதியுடையவராக இருக்கலாம்.

- உங்கள் பெற்றோர் விசா அல்லது பெற்றோருக்கான பங்களிப்பு விசா விண்ணப்பத்தை 24 மார்ச் 2021க்கு முன் விண்ணப்பித்திருக்க வேண்டும்
- விசா விண்ணப்பம் அவுஸ்திரேலியாவில் தாக்கல் செய்யப்பட்டிருக்க வேண்டும்
- நீங்கள் 24 மார்ச் 2021 அன்று அவுஸ்திரேலியாவில் இருந்திருக்க வேண்டும்
- விசா விண்ணப்பம் இறுதி செய்யப்படாமல் இருந்திருக்க வேண்டும்.

நீங்கள் தகுதிபெறக்கூடிய இணைப்பு விசா துணைப்பிரிவானது, உங்கள் பெற்றோர் அல்லது பெற்றோர் பங்களிப்பு விசா விண்ணப்பம் செய்யப்பட்ட நேரத்தில் உங்கள் சூழ்நிலையைப் பொறுத்து இருக்கும்.

நீங்கள் விசா விண்ணப்பித்த நேரத்தில் குறிப்பிடத்தக்க விசா வைத்திருந்தால், நீங்கள் இணைப்பு விசா A - BVA - (துணைப்பிரிவு 010) -க்கு விண்ணப்பித்து, அது உங்களுக்கு வழங்கப்படலாம்.

நீங்கள் விசாவிற்கு விண்ணப்பத்த நேரத்தில் உங்களிடம் குறிப்பிடத்தக்க விசா எதுவும் இல்லை என்றால், நீங்கள் BVA-விற்கு தகுதி பெற மாட்டீர்கள். இணைப்பு விசா E - BVE - (துணைப்பிரிவு 050)-க்கான விதிமுறைகளை நீங்கள் பூர்த்தி செய்ய முடியும்.

அவுஸ்திரேலியாவிற்கு வெளியே உள்ள அலுவலகத்தில் பெற்றோர் விசா அல்லது பெற்றோர் பங்களிப்பு விசாவிற்கான காகித விண்ணப்பத்தை நீங்கள் தாக்கல் செய்தால், உங்கள் விசா விண்ணப்பத்துடன் தொடர்புடைய இணைப்பு விசா வழங்குவதற்கான நிபந்தனைகளை நீங்கள் பூர்த்தி செய்ய மாட்டீர்கள்.

இணைப்பு விசாவிற்கு விண்ணப்பிக்க விரும்பினால், பூர்த்தி செய்த படிவம் 1005 என்பதை WA பெற்றோர் விசா மையத்திற்கு அனுப்பவும். பூர்த்தி செய்த படிவத்தை மின்னஞ்சல் செய்ய வேண்டாம். மின்னஞ்சலில் பெறப்படும் படிவம் 1005 செல்லுபடியாகாத விண்ணப்பமாக கருதப்படும், அதனைப் பரிசீலிக்க முடியாது.

## ஸ்பான்சர் செய்யப்பட்ட பெற்றோருக்கான (தற்காலிகமானது) (துணைப்பிரிவு 870) விசாக்கள்

நீங்கள், ஸ்பான்சர் செய்யப்பட்ட பெற்றோருக்கான (தற்காலிகமானது) விசா (துணைப்பிரிவு 870) (SPTV) வைத்திருந்து, 1 ஜூலை 2021 அன்று அவுஸ்திரேலியாவுக்கு வெளியே இருந்திருந்தால், உங்கள் விசாக் காலம் தானாகவே 18 மாதங்கள் நீட்டிக்கப்படும்.

கோவிட்-19 பயணக் கட்டுப்பாடுகள் காரணமாக அவுஸ்திரேலியா விசாவில் 3 அல்லது 5 ஆண்டுகள் முழுவதையும் செலவிட முடியாத SPTV வைத்திருப்பவர்களுக்கு உதவுவதே இந்தச் சலுகையின் நோக்கமாகும்.

இந்தச் சலுகையின் கீழ் உங்கள் விசா நீட்டிக்கப்பட்டிருந்தால், கூடுதலாக வழங்கப்பட்ட இந்த 18 மாதங்கள் உங்கள் ஒட்டுமொத்த 10 ஆண்டுகள் தங்கியிருக்கும் காலத்தில் கணக்கிடப்படாது.

SPTV ஸ்பான்சர்களுக்கான ஸ்பான்சர்ஷிப் கடமைகளும் அதே 18 மாத காலத்திற்கு நீட்டிக்கப்பட்டுள்ளன.
உங்கள் விசா விவரங்களையும் நிபந்தனைகளையும் VEVO -ஐப் பயன்படுத்திச் சரிபார்க்கலாம்.